தலைமைக் கழக அறிவிப்பு

மறுசீரமைப்புக்கான தலைமைக் கழக பிரதிநிதிகள் - மாவட்டச் செயலாளர்களின் உடனடி கவனத்திற்கு!

பவளவிழா கண்டு நூற்றாண்டை நோக்கி நடைபோடும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் புத்தெழுச்சியைப் பெறஅடுத்தகட்டப் பயணத்தில் வெற்றிகளை அடைய, கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அமைக்கப்பட்ட மறுசீரமைப்புக்குழுவானது பல்வேறு பரிந்துரைகளை கழகத்தலைவர் அவர்களிடம் வழங்கியுள்ளது.

மறுசீரமைப்புக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையிலேயே மாவட்டம் பகுதி - நகரம் - ஒன்றியம் - பேரூர் - வட்டம் கிளைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என 22 ஆகஸ்ட் 2026 அன்று நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் இயற்றப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் ஒரே அளவிலான பகுதிநகரம்ஒன்றியம்பேரூர் அமைந்திட வேண்டும் என்பது மறுசீரமைப்பின் முக்கியமான இலக்காகும். தற்போது பல்வேறு இடங்களில் பரிந்துரைகளின் அடிப் படையில் இன்றி தன்னிச்சையாக கழக அமைப்புகள் மறுசீரமைக்கப்படுவதாக தலைமைக் கழகத் திற்கு தகவல்கள் வருகின்றன. தலைமைக்கழகத்தில் சரிபார்க்கப்படும் போது பரிந்துரைகளின்படி இல்லாத மறுசீரமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

இயற்றப்பட்ட தீர்மானங்களின்படி, ஒன்றியக்கழகங்கள் சராசரியாக 30,000 வாக்குகளைக் கொண்டதாக அமைத்திட வேண்டும். உதாரணமாக ஒரு வருவாய் ஒன்றியத்தில் 55,000 வாக்கு கள் இருந்து முன்பு மூன்று அல்லது நான்கு கழக ஒன்றியமாக இருந்திருந்தாலும் தற்போதைய செயற்குழு தீர்மானத்தின் அடிப்படையில் சராசரியாக 30,000 வாக்குகள் என்பதை அடிப்படையாக வைத்து இரண்டு கழக ஒன்றியங்களாக மட்டுமே பிரிக்க முடியும். 18,000 வாக்குகள் வீதம் மூன்றாகவோ 14,000 வாக்குகள் வீதம் நான்காகவோ பிரிப்பது கூடாது.

பகுதிக்கழகங்கள் சென்னையில் 40,000 வாக்குகளைக் கொண்டதாகவும், மற்ற மாநகரங்களில் சராசரியாக 30,000 வாக்குகளைக் கொண்டதாகவும் அமைய வேண்டும். நகரக்கழகங்கள் சராசரியாக 40,000 வாக்குகளைக் கொண்டதாகவும் அமைந்திட வேண்டும்.

வட்டக்கழகங்கள் சென்னை மாநகராட்சியில் சராசரியாக 10,000 வாக்குகளைக் கொண்டதாக வும் பிற மாநகராட்சிகளில் சராசரியாக 5000 வாக்குகளைக் கொண்டதாகவும் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

எனவே, மாவட்டச் செயலாளர்களும், மறுசீரமைப்புக்கான தலைமைக்கழக பிரதிநிதிகளும் மேற்சொன்ன தீர்மானங்களின் அடிப்படையிலேயே மறுசீரமைப்பு செய்யப்படுவதை உறுதி செய்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் :12,10.2026.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

பணி நிரந்தரம் செய்யக் கோரி சென்னையில் போராட்டம்!

மருத்துவமனைப் பணியாளர்கள் 300க்கும் மேற்பட்டோர் குண்டுக்கட்டாக கைது!

போலீசார் சாலையில் தரதரவென இழுத்துச் சென்றதால் பலர் படுகாயம்!

சென்னை, அக்.14-



பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறை வேற்ற வலியுறுத்தி எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே போராட்டம் நடத்தி வந்த அரசு பன்னோக்கு மருத்துவமனை பணியாளர் கள் 300க்கும் மேற்பட் டோரை போலீசார் வலுக்கட் டாயமாக சாலையில் தரதரவென இழுத்து சென்று கைது செய்தனர். மேலும், போராட்டத்தை தலைமை ஏற்று நடத்திய நிர்வாகிகளை ஓட்டல் அறைகளி லேயே போலீசார் சிறை வைத்த தால் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழக முழுவதும் உள்ள பன் னோக்கு அரசு மருத்துவமனையில் 13 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பந்த முறையில் பணியாற்றி வரும் ஆயி ரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் தங்களை பணி நிரந்தரம் செய்ய கோரியும், மாதம் ஒரு நாள் ஊதியத் துடன் விடுமுறை, அரசு விடுமுறை களில் தங்களுக்கும் விடுமுறை அளிக்க கோரி பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர். அதேநேரம் சட்டமன்ற தேர்தலின் போது த.வெ.க. நாங்கள் ஆட்சிக்கு வந் தால், அரசு பன்னோக்கு மருத்துவ மனைகளில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்யப் படுவார்கள் என்று வாக்குறுதி அளித் த னர்.

நூற்றுக்கணக்கான போலீஸ் குவிப்பு!

ஆனால் த.வெ.க. அரசு ஆட் சிக்கு வந்து 5 மாதங்கள் ஆன நிலையில் தேர்தலின் போது அளித்த வாக்குறுதியை நிறைவேற் றாததை கண்டித்து தமிழகம் முழு வதும் உள்ள அரசு பன்னோக்கு மருத்துவமனையில் பணியாற்றி வரும் ஒப்பந்த பணியாளர்கள் நேற்று காலை 10 மணி அளவில் எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் மைதானம் அருகே போராட்டம் நடத்த எழும்பூர் காவல்நிலையத்தில் அனுமதி கோரினர். ஆனால் போலீ சார் போராட்டத்திற்கு அனுமதி அளிக்கவில்லை.

இதையடுத்து, பன்னோக்கு அரசு மருத்துவமனை பணியாளர்கள் திட் டமிட்டப்படி போராட்டம் நடத்தப்ப டும் என்று அறிவித்தனர். பின்னர் போராட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் 200க்கும் மேற்பட்டபோ லீசார் எழும்பூர் ராஜரத்தினம் மைதா னம் அருகே சாலையில் தடுப்புகள் அமைத்து பாதுகாப்பு பணியில் ஈடு பட்டனர். தடையை மீறி போராட்டத் தில் ஈடுபடும் பணியாளர்களை கைது செய்து ஏற்றும் வகையில் 5க்கும் மேற்பட்ட பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டது.

அப்போது திட்டமிட்டப்படி தமிழ கம் முழுவதிலும் இருந்து அரசு பன்னோக்கு மருத்துவமனைகளில் பணியாற்றும் ஒப்பந்த பணியாளர் கள் 300க்கும் மேற்பட்டோர் ஒன்று கூடினர். இதை கவனித்த பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர் களை தடுத்து பேருந்து களில் ஏற்ற முயன்றனர். இதனால் ஆத்திரம டைந்த பணியாளர்கள் திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் போலீ சார் சாலை மறிய லில் ஈடுபட்ட பணியாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி னர். ஆனால் அவர்கள், எங்கள் கோரிக் கையை அரசு ஏற்கும் வரை நாங் கள் இங்கிருந்து கலைந்து செல்ல மாட்டோம் என்று கூறி அரசுக்கு எதி ராக கோஷம் எழுப்பினர்.

பின்னர் பேச்சு வாத்தை தோல்வி யில் முடிந்ததை தொடர்ந்து போலீ சார் சாலை மறியலில் ஈடுபட்ட பணி யாளர்களை கைது செய்ய முயன்றனர். இதனால் போலீசாருக் கும் போராட்டக்காரர்களுக் கும் இடையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது. ஒரு கட்டத் தில் போலீசார் மறியலில் ஈடு பட்ட அனைவரையும் குண்டு கட்டாக கைது செய்தனர். ஆனால் மறியலில் ஈடுபட்ட பணியாளர்கள் சாலையில் படுத்துக் கொண்டு கைது செய்ய முயன்ற போலீசாரை கண்டித்து கோஷங்கள் எழுப் பினர். இதனால் சிறிது நேரம் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இருந்தாலும் போலீசார் பெண் பணியாளர்கள் என்றும் பாராமல் ஆண் காவலர்கள் உதவியுடன் தர தரவென இழுத்துச் சென்று பேருந் துகளில் ஏற்றினர். பலர் இதில் படுகா யமடைந்தனர். இருந்தாலும் போலீசார் போராட்டத்திற்கு வந்த ஒருவரையும் விடாமல் துரத்தி சென்று கைது செய்தனர். ஒருவரை கைது செய்ய 10 போலீசார் பயன் படுத்தப்பட்டது. அதில் பெண் பணி யாளர்கள் மயங்கி விழுந்தனர்.

ஆனால் அவர்களை மருத்துவம னைக்கு அழைத்து செல்லாமல் பேருந்துகளில் ஏற்றி சென்றனர்.

ஓட்டலில் சிறை வைப்பு!

அதேநேரம் எழும்பூரில் ஓட்டலில் தங்கி இருந்த போராட்டத்தை தலைமை ஏற்று நடத்தும் அரசு பன்னோக்கு பணி யாளர்களின் நிர் வாகிகள் பலரை போலீசார், ஓட்டலி லேயே சிறை வைத்தனர். மேலும் வெளி மாவட்டங்களில் இருந்து எழும்பூர் நோக்கி வந்த பணியாளர் கள் பலரை கிளாம்பாக்கம் பேருந்து நிலையம், கோயம்பேடு பேருந்து நிலையங்களில் போலீசார் தடுத்து திருப்பி அனுப்பினர்.

தமிழகம் முழுவதும் 13 ஆண்டு களாக பணி நிரந்தரம் செய்யக் கோரி போராட்டம் நடத்த வந்த அரசு பன்னோக்கு பணியாளர்களை போலீ சார் மூலம் த.வெ.க. அரசு அடக்கு முறையில் ஈடுபடுவதாக பல வேறு அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

காங்கிரசை கழட்டிவிட்ட பிறகுதான் தி.மு.க.வுக்கு பன்மடங்கு ஆதரவு பெருகியுள்ளது!

முதல் பக்கத் தொடர்ச்சி!

ஞானேஷ்குமார் அவர்களைப்பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று தமிழ்நாட்டில் இருந்து முதல் ஆளாக அறிக்கை விட்டவர் எங் கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தொடர்ந்து இடைத்தேர் தல் பரப்புரைகளிலும் இதுகுறித்து வெளிப்படையாகப் பேசினார். அது மட்டுமின்றி, கடந்த ஏப்ரல் மாதமே, ஞானேஷ்குமாரைப்பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகளின் சார்பில் அளிக் கப்பட்ட நோட்டீசிலும் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

பதவிப் பிச்சைக்காக கூட்டணி தர்மத்திற்கு எதிராக காங்கிரஸ் புல் லுருவிகள் தி.மு.க.வுக்குச் செய்த துரோகத்தையடுத்து இந்தியா கூட்ட ணியில் இருந்து நாங்கள் வெளி யேறிவிட்டோம். இந்தியா கூட்ட ணியில் இல்லாத தி.மு.க. இனி அவர்கள் முன்னெடுக்கும் போராட் டங்களில் இணைய வேண்டிய அவசியம் இல்லை. இணைய வேண்டும் என்று கட்டாயப்படுத் தும் உரிமையும் அவர்களுக்கு இல்லை. இனி எங்கள் வழி, தனி வழி!

மாணிக்கம் தாகூர் கூடு, சொர ணையுள்ள மனிதராக இருந்தால் காங்கிரசுடன் கூட்டணியில் இருக் கும் த.வெ.க.வின் தலைவர் விஜய் ஏன் போராட்டத்தில் இணை யவில்லை என்று கேட்க வேண் டும். ஞானேஷ் குமார் குறித்தோ, பா.ஜ.க. குறித்தோ, பிரதமர் மோடி குறித்தோ ஒரு வார்த்தை கூட உதிர்க்காத தொடைநடுங்கிதான் விஜய். அப்படிப்பட்ட தொடைநடுங் கியின் காலைக் கழுவிக் குடிக்கும் மாணிக்கம் தாகூர் போன்றவர் களுக்கு தி.மு.க.வின் பா.ஜ.க. எதிர்ப்பு குறித்துப் பேசத் துளியும் அருகதை இல்லை.

கடந்த இரு நாட்களாக டெல்லி யில் இந்தியாவின் இளைஞர் பட் டாளம் ஒன்றுதிரண்டு ஞானேஷ் குமார் அவர்களின் பதவி நீக் கத்தை வலியுறுத்திப் போராடி வரு கிறார்கள். அவர்கள் மீது கடும் அடக்குமுறைகளும் வன்முறை யும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. பல முன்னாள் முதலமைச்சர் களும், நாடாளுமன்ற உறுப்பினர் களும் கூட இந்த அடக்குமுறை யில் இருந்து தப்பவில்லை. இவற்றை எதிர்த்து தொடர்ந்து கடும் கண்டனங்களைக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர் கள் தெரிவித்து வருகிறார்.

தொகுதி மறுவரையறை மசோதாவை கொளுத்தி வீசியவர் தலைவர் மு.க.ஸ்டாலின்!

திரிணாமூல் காங்கிரஸ், SFI அமைப்பினர், கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினரே கூட இதற்காக மனப்பூர்வமாக நன்றி தெரிவித்து, கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கண்டன அறிக்கை யைப் பகிர்ந்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட எங்களைப் பார்த்து தான், "எஸ்.ஐ.ஆருக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்றால் பா.ஜ.க.வை பகைத்துக்கொள்ள நேரிடும் என்று தி.மு.க. அஞ்சு கிறது" என்று மாணிக்கம் தாகூர் வார்த்தை வாந்தி எடுத்திருக்கிறார். எவரையும் கண்டு அஞ்சும் இயக் கம் அல்ல தி.மு.க.! தேர்தல் பரப்பு ரைக்கு இடையிலும், கருப்புடை தரித்து தொகுதி மறுவரையறை மசோதாவைக் கொளுத்தி பா.ஜ.க. வின் முயற்சியை வீழ்த்திய வீரர் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

பஞ்ச் டயலாக் பேசிய பக்கா பொடிமாஸ் விஜய் SIR குறித்து பேசியதுண்டா?

பாசிசம், பாயாசம் என பஞ்ச் பேசிய பக்கா பொடிமாஸ் முதல மைச்சர் விஜய் ஏன் இதுவரை SIR மற்றும் ஞானேஷ் குமார் குறித்துப் பேசவில்லை? அவர் காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கிறாரா இல்லையா? அவரைக் கேள்வி கேட்க மாணிக்கம் தாகூருக்கு ஏன் வக்கு வகையில்லை? காங்கிரஸ் கட்சியிலேயே சில சுயமரியாதை உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கள் முதலமைச்சர் விஜய்யின் கள்ள மவுனம் குறித்தும், தமிழ் நாட்டில் அவரது அரசு போராட்டங் களை அடக்குவது குறித்தும் கேள்வி எழுப்பி உள்ளனர். ஆனால், கட்சியின் தலைவராக இருக்கும் மாணிக்கம் தாகூரோ பனையூர் பண்ணையாரின் கால டியில் மண்டியிட்டு, திமுகவை நோக்கிக் கூவுகிறார்.

இவர்களெல்லாம் பா.ஜ.க. எதிர்ப்பு குறித்து கழகத்துக்குப் பாடம் எடுக்க வேண்டிய நிலை யில் நாங்கள் இல்லை. அதிலும், பா.ஜ.க. எதிர்ப்பில் இந்தியாவி லேயே மிக வலிமை வாய்ந்த கூட்டணியைக் கட்டமைத்து, தொடர்ந்து இரு நாடாளுமன்றத் தேர்தல்களில் முழு வெற்றியைக் குவித்த தி.மு.க. குறித்து, அடுத்த வர் உழைப்பை உறிஞ்சி வாழ்க் கையை ஓட்டும் மாணிக்கம் தாகூர் போன்ற அட்டைப்பூச்சிகள் பேசக் கூடாது. த.வெ.க. போடும் பிஸ்கட்டுக்காக தி.மு.க. குறித்து இனிப் பேச வேண்டாம் என எச்ச ரிக்கிறோம். அவதூறு தொடர்ந் தால் அதற்குரிய விளைவை எதிர் கொண்டே ஆக வேண்டும்."

இவ்வாறு தலைமைக் கழகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கூட்டணியில் இருக்கும் விஜய் ஏன் போராடவில்லை?

மாணிக்கம் தாகூர் சூடு, சொரணையுள்ள மனிதராக இருந்தால் காங்கிரசுடன் கூட்டணியில் இருக்கும் த.வெ.க.வின் தலைவர் விஜய் ஏன் போராட்டத்தில் இணையவில்லை என்று கேட்க வேண்டும். ஞானேஷ் குமார் குறித்தோ, பா.ஜ.க. குறித்தோ, பிரதமர் மோடி குறித்தோ ஒரு வார்த்தை கூட உதிர்க்காத தொடைநடுங்கிதான் விஜய். அப்படிப்பட்ட தொடைநடுங்கியின் காலைக் கழுவிக் குடிக்கும் மாணிக்கம் தாகூர் போன்றவர்களுக்கு தி.மு.க.வின் பா.ஜ.க. எதிர்ப்பு குறித்துப் பேசத் துளியும் அருகதை இல்லை.

தலைமைச் செயலகத்தில் மின் தடை - இருட்டு அறையில் அமைச்சர்கள்!

சென்னை, அக். 14-

தலைமைச் செயலகத் தில் அமைச்சர்கள் அறை யில் திடீர் மின்வெட்டு ஏற் பட்டுள்ளது. திடீர் மின்வெட்டால் அமைச்சர் கள் செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா அறை இருளில் மூழ்கியது. முதல மைச்சர், அமைச்சர்கள் அறை உள்ள பிரதான கட் டடம் முழுவதும் மின் வெட்டால் பாதிப்பு ஏற்பட் டுள்ளது.

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக மின்வெட்டு பிரச்சினை அதிகரித்துள் ளது. அறிவிக்கப்படாத மின்வெட்டால் கடும் அவ திக்கு உள்ளாகி வரும் பொதுமக்கள், சில இடங்க ளில் போராட்டத்தில் ஈடுபட் டனர். அமைச்சர்கள் பங் கேற்ற நிகழ்ச்சிகளில் கூட மின்வெட்டு ஏற்படுவது தொடர்கதையாகி வந்தது. தமிழகத்தில் மின்பற்றாக் குறையை சமாளிக்க கூடு தலாக 4,500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய தமிழக மின்வாரி யம் டெண்டரும் விட் டுள்ளது. பருவநிலை மாறு பாடு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி சரிவு போன்றவற்றால் மின் பிரச்சினை அதிகரித்து இருப்பதாக அதிகாரிகள் வட்டாரத்தில் சொல்லப்படு கிறது.

தொடர்ச்சியாக ஏற்படும் மின்வெட்டு காரணமாக கடும் அவதி அடைவதால், இந்தப் பிரச்சினைக்கு உட னடியாக அரசு தீர்வு காண வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். இந்த நிலையில், தலை மைச் செயலகத்தில் அமைச்சர்கள் அறையி லேயே நேற்று திடீர் மின் வெட்டு ஏற்பட்டது பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது. திடீர் மின்வெட்டால் அமைச்சர்கள் செங்கோட் டையன், ஆதவ் அர்ஜுனா அறை இருளில் மூழ்கியது. அமைச்சர்கள் அறை உள்ள முதல் தளம் முழுவ தும் மின்வெட்டு ஏற்பட் டது. இந்தத் திடீர் மின் தடை எதனால் ஏற்பட்டது என்பது பற்றி மின்வாரிய ஊழியர்கள் ஆய்வு மேற் கொண்டு வருகிறார்கள்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் பேரூர் கழக மாவட்ட பிரதிநிதி கு.மணிமாறன் – முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர் எம். உமா ஆகியோர் இல்லத் திருமண விழா நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ்ராஜ் தலைமையில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேரில் சென்று மணமக்கள் டி.சக்திதாசன், எம்.தமிழரசி ஆகியோரை வாழ்த்தினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், பொதுக்குழு உறுப்பினர் எஸ். சுப்பிரமணி, நிர்வாகிகள் அலெக்சாண்டர், பா.து.தமிழரசன், க.சு. தமிழ் பிரியன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.